தெய்வமேதுணை.

திருத்தணிகை

சிவசுப்பிரமணியக்கடவுள்பேரில்,

# வேலாயுதக்கண்ணிகள்.

இஃது,

சிறுமணவூர்

## முனிசாமிமுதலியார்

அவர்களால்

இயற்றப்பட்டு,

தமது

சென்னை சூளை,

சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1905.

மேற்படி அச்சுக்கூடத்தில் விற்பனைக்குத்தயாராயிருக்கும்

# புத்தக விளம்பரம்.

| | | | |
|---|---|---|---|
| இராமாயணம் கிளேஸ் 2-வாலியம் ஒஸ்திபதிப்பு | 4 | 0 | 0 |
| சாதாரண பாரதம் 4-வாலியம் | 4 | 0 | 0 |
| பிங்குலா [அச்சிலிருக்கிறது] | 4 | 0 | 0 |
| சோதிடசிகாமணி ஒஸ்திபதிப்பு | 3 | 8 | 0 |
| இங்கிலீஷ், தமிழ் வைத்தியசிகாமணி ஒஸ்திபதிப்பு | 3 | 0 | 0 |
| இந்தியன் பீனல்கோட் ராயல் ஒஸ்திபதிப்பு | 3 | 0 | 0 |
| கிராம முனிசிப்கோர்ட் ராயல் கிளேஸ் | 3 | 0 | 0 |
| கிரிமினல்கோர்ட் சட்டம் [அச்சிலிருக்கிறது] | 2 | 0 | 0 |
| பிரபஞ்சவுற்பத்தி ஒஸ்திபதிப்பு | 2 | 0 | 0 |
| சாதாரண இராமாயணம் | 1 | 8 | 0 |
| உலகவிசித்திரக்கதை ஒஸ்திபதிப்பு | 1 | 0 | 0 |
| விக்கிரமாதித்தன் கதை கிளேஸ் | 1 | 0 | 0 |
| பதிவிரதைகள் சரித்திரம் | 0 | 12 | 0 |
| விராடபர்வம் ராயல் 8-பேஜ் லெத்தோபடத்துடன் | 0 | 12 | 0 |
| பட்டணத்தார்புராணம் ராயல் 16-பேஜ் லெத்தோபட | 0 | 12 | 0 |
| பார்வதிபாலியமென்னும் விஷவைத்தியசிந்தாமணி | 0 | 12 | 0 |
| நஷ்டஜாதகம் கிளேஸ் | 0 | 8 | 0 |
| சவகண்ட ஆருடம் கிளேஸ் | 0 | 8 | 0 |
| மூலிகைமர்மம் கிளேஸ் | 0 | 8 | 0 |
| திருத்தணிகைச் சன்னதிமுறை திக்கு | 0 | 8 | 0 |
| சரீரசாஸ்திரம் கிளேஸ் | 0 | 8 | 0 |
| வைராக்கியம் 1000-ம்பாடல்கள் கிளேஸ் | 0 | 8 | 0 |
| மனமோகனக்கண்ணாடி கிளேஸ் | 0 | 8 | 0 |
| ஜெகத்தர்ஷா கிளேஸ் | 0 | 8 | 0 |
| புலவுநூல் இந்தியா சமையல்சாஸ்திரம் கிளேஸ் | 0 | 8 | 0 |
| கண்கட்டுவித்தை | 0 | 6 | 0 |
| ஷை 2-ம் பாகம் | 0 | 6 | 0 |
| சகாதேவர் சோதிடநாடி | 0 | 6 | 0 |
| திருநேத்திரசிந்தாமணி | 0 | 5 | 0 |
| பெண்கள் ருதுஜெனனஜாதகம் | 0 | 4 | 0 |
| சர்வபிரயாண சகுனசாஸ்திரம் | 0 | 4 | 0 |
| அகடவிகட சம்சாரி | 0 | 4 | 0 |
| வாந்திபேதி நிவாரணு | 0 | 2 | 0 |
| சுருக்குப்பஞ்சபட்சி | 0 | 2 | 0 |
| சைவானுஷ்டானவிதி | 0 | 2 | 0 |
| அவிவேகபூரணகுருகதை | 0 | 1 | 6 |
| விபூதி ருத்திராட்ச மகத்துவம் | 0 | 1 | 3 |

இப்படிக்கு,

சிறுமணவூர்-முனிசாமி முதலியார்,

நெ. 12. எட்டண்ணா நாய்க்கன் வீதி,

சூளை போஸ்டு, மதிராஸ்.

உ

தெய்வமே துணை.

திருத்தணிகை

சிவசுப்ரமணியக் கடவுள்பேரில்,

# வேலாயுதக் கண்ணிகள்.

சிர்பூத்தலோகமெல்லாஞ் சிவகுருவென் றுன்னுடைய
பேர்பூத்திருப்பதென்ன பெருமைவேலாயுதனே, 1

திருமருவுலோகமெல்லாந் தேடுமடியார்கள்முன்னே
குருவடிவங்கொண்டுலவுங் குருவேவேலாயுதனே. 2

அண்டர்முதலோர்தொழுமுன் னடியார்க்கடிமைசெயும்
தொண்டரொடுநான்கலக்க துணிந்தேன்வேலாயுதனே. 3

உன்னினைப்புமன்றியு முன்புகழுமன்றியினி
பின்னையொருதெய்வநிலை பேசேன்வேலாயுதனே. 4

தினையளவுநேரமுந்தன் றிருமுகத்தைக்காட்டமனம்
நினையாதிருப்பதென்ன நெறியோவேலாயுதனே. 5

சத்தியமாய்நின்னடியைச் சார்ந்தேனென்றுசொன்னபின்னும்
இத்தனைக்கடுரகுண மேனோவேலாயுதனே. 6

கனியாதநெஞ்சமுனக் கல்லவென்றுநான்மறையும்
துணிவாகசொல்லுமெந்தன் துரையேவெலரயுதனே. 7

பொறிவழியேசென்றுயிர்ந்த பொய்யுலகவாழ்வைநம்பி
அறிவழிந்தேன்றிருத்தணிகை பரசேவேலாயுதனே. 8

தாயுமில்லைதந்தையில்லை தான்றனியேயுன்னடிமை
சேயனெனைக்காருமையா சிவகுருவேவேலாயுதனே. 9

அன்னையுநீதந்தையுநீ ஆதரிக்குந்தெய்வமுநீ
உன்னையன்றிவேறுதுணை யுண்டோவேலாயுதனே. 10

மைதிகழுமின்விழியார் மையலிலேசொக்கிமனம்
பொய்வழியேகெட்டலைந்துப் போனேன்வேலாயுதனே. 11

உன்னைநினைந்துநித முன்புகழைப்பாடாமல்
பொன்னைநினைந்துகெட்டுப் போனேன்வேலாயுதனே. 12

காசின்மேலாசையினாற் காலமெல்லாமென்மனதை
வேசிபோலேயலைய விட்டேன்வேலாயுதனே. 13

நல்லோருறவைநித நாடாமலென்மனதைச்
செல்லாதகாசுநிகர் செய்தேன்வேலாயுதனே. 14

பொல்லாதபுன்மனந்தான் போனவழிநானலைந்தேன்
எல்லாம்பொறுத்தருள்செ யெந்தாய்வேலாயுதனே. 15

விட்டகுறையில்லையென்ற வினைகளின்சொல்வழியே
கட்டலைந்துபோனேன் தடுத்தாள்வேலாயுதனே. 16

ஆறிரண்டுதோளுமுந்த னற்புதவேலாயுதமும்
நேரிருந்துநான்பார்க்க நினைத்தேன்வேலாயுதனே. 17

அன்றடியேன்மீதிருந்த வாசையெல்லாமுந்தனுக்கு
இன்றுமகலவைத்தா யெந்தாய்வேலாயுதனே. 18

நிராப்பிலரியதனால் திகைத்திருந்தபோதெனக்கு
ஆர்சொல்லிநீயமிழ்த மளித்தாய்வேலாயுதனே. 19

தர்மவைத்தியஞ்செய் தணிகைமலைவேலனொன்று
சர்வவுயிர்சொல்வதிது சத்தியம்வேலாயுதனே. 20

பண்டிதனார்தொண்டனென்று பாரறியநானிருக்க
உண்டோவினையணுவு முறைசெய்வேலாயுதனே. 21

உன்னுடையதொண்டனென்று வூரறியநானிருக்க
என்வினைதீராவிடிலோ பேச்சாம்வேலாயுதனே. 22

தீராதவியாதியெல்லாந் திருநீற்றினலகற்றும்
பேரெடுத்தநீயெனது பிணிதீர்வேலாயுதனே. 23

பட்டதெல்லாம்போதுமென்றுன் பாதமலரைப்பிடித்தேன்
இட்டவழைத்தாளுமையா கதிர்வடிவேலாயுதனே. 24

மெய்சோரநின்னடியை மெய்யாகநான்பிடித்தேன்
கைசோரவிட்டுவிட்டால் கதியார்வேலாயுதனே. 25

நெஞ்சமறிவாயெந்த வினைப்பறிவாய்நானேழை
கொஞ்சமென்றுதள்ளாதே யென்குருவேலாயுதனே. 26

ஆராய்ந்துயென்பிணியை யணுவளவுமில்லாமல்
சீராகத்தீர்த்தருள்வாய் செந்தில்வேலாயுதனே. 27

கோடானகோடியுன்னைக் கூடுமடியார்களெல்லாம்
வாடாதிருக்கயென்மேல் வாதோவேலாயுதனே. 28

தணியாதகோபமெல்லாந் தணிந்ததிருத்தணிகை
மணியேயுன்னடியைவிட மாட்டேன்வேலாயுதனே. 29

விடமாட்டேனுன்னடியை வினைப்பயனையெள்ளவும்
படமாட்டேனுன்கடைக்கண் பாரும்வேலாயுதனே. 30

ஆசாபாசங்களெனு மாழியிலேபாழுமனம்
மோசம்போகாமலொரு மொழிசொல்வேலாயுதனே. 31

இழுக்குடையவஞ்சநெஞ்ச யீனர்களைச்சேர்ந்துமனம்
அழுக்கடைந்துநின்றே னருள்செய்வேலாயுதனே. 32

ஆதாரமில்லையென்று ஆயிரம்முறையுரைத்தும்
சூதாயிருப்பதென்ன சொல்லும்வேலாயுதனே. 33

எத்தனையோவன்பிறவி யெடுத்தெடுத்துபட்டதுயர்
அத்தனையும்நீயறிந்த தன்றோவேலாயுதனே. 34

பதறுதிருக்கவெகு பாடுபட்டும்வஞ்சமனம்
சிதறியேபோகுதென்ன செய்வேன்வேலாயுதனே. 35

கொல்லாவிரதமதை கொள்ளவெகுவாசைகொண்டேன்
கல்லாதநெஞ்சுநிலை காணேன்வேலாயுதனே. 36

ஆழியிலேவிட்டெறிந்த அருந்துரும்புபோலேமனம்
பாழிலலைவதென்ன பாவம்வேலாயுதனே. 37

வில்லானதைப்பழிக்கும் வேல்விழிசேர்மாதர்களின்
சொல்லால்மயக்கமுறுஞ் சூதேன்வேலாயுதனே. 38

வரைராஜன்கண்ணளித்த வாழ்வேதிருத்தணிகை
துரையேயுன்பாதமலர் தொட்டேன்வேலாயுதனே. 39

மொல்லாதுஞ்சொல்லிநஞ் சூழ்ந்தாலுமுன்மனது
கல்லோயிரும்போயென்ன காணேன்வேலாயுதனே. 40

கல்லினுமெள்ளளவு கரையுமேயுன்மனது
பொல்லாதுபொல்லாதினி பொறுக்கேன்வேலாயுதனே. 41

தாயாருமுன்னருளைத் தாகமாய்நாடுமென்மேல்
ஆபாசமென்தனிகை யையாவேலாயுதனே. 42

இராவிராமென்னுந் திரைநடுவேசிக்கிமனம்
நோய்க்கரையுதையோ நிலைசெய்வேலாயுதனே. 43

என்றுன்னருள்சுரக்கு மென்றுயென்மனம்பழுக்கும்
அன்றல்லோநான்மனித னானேன்வேலாயுதனே. 44

கல்லளவாம்நெஞ்சுகடைய கன்னியர்கள்வஞ்சமனச்
சொல்லளவைநம்பில்வெகு சூதாம்வேலாயுதனே. 45

பாதகர்வஞ்சநெஞ்சப் பாவையர்கள்சொல்லைநம்பி
யார்தான்கரையடைந்தா ருமைவேலாயுதனே. 46

சேற்றிற்றவளைமிகச் சேர்ந்திருந்தாலுங்கமலம்
பூத்தகுணங்கண்டருந்தப் போமோவேலாயுதனே. 47

காமன்செயல்விளைத்துக் கண்மயக்குமாதர்களோ
காமனிடதூதுவரா மெந்தாய்வேலாயுதனே. 48

பட்டுபட்டுயேழைநெஞ்சம் பாவையர்கள்தன்வசமே
கட்டியெட்டிப்போகுதென்ன யெழுத்தோவேலாயுதனே. 49

கண்மயக்குமெய்மயக்குங் கட்டழகும்சேர்மடவார்
புண்ணிலழுந்திப்புண்ணாய்ப் போனேன்வேலாயுதனே. 50

ஆசைவலைவிசமைந்த அரிவைமார்மெய்மயக்க
மோசமதைநம்புவது மோசம்வேலாயுதனே. 51

பொன்னாலிகமயக்கிப் பொய்வழியேதள்ளுமந்த
மின்னாரைவிட்டவரே மேலோர்வேலாயுதனே. 52

விதியாகிநூற்றடுக்க வழிதோற்றுமாதரின்சொல்
மதியைத்தடுப்பதொரு மலைதான்வேலாயுதனே. 53

பொய்யுறவுகொண்டுநிதம் பேசுமடவார்கள்விஷப்
பையுறவைத்தள்ளவிற்ப் பண்ணும்வேலாயுதனே. 54

நன்றியற்றவஞ்சநெஞ்ச நாய்களெனும்பெண்கள்தனக்
குன்றகுறித்தேடுமென்னாங் குறைப்பாய்வேலாயுதனே. 55

குன்றேபெருமலையோ கோளமோமாதர்மயல்
என்றேதுலைப்பதுநா னேழைவேலாயுதனே. 56

எள்ளளவுநீகிருபை யெண்ணிறலென்னுடைய
கள்ளமனங்கடிகையிலே கட்டும்வேலாயுதனே. 57

அறியேன்சிறியேனு னாதாரம்யாருமில்லேன்
தெரியேனொருவழியும் தேறேன்வேலாயுதனே. 58

பண்டுவிட்டயென்குறைதான் பற்றுமோபற்றியுன்னை
கண்டுவிட்டாலட்சணமே கனவான்வேலாயுதனே. 59

ஐயாவுன்திருவருளை யனுவளவுவேண்டிமனம்
நெய்யாயுருகுதென்ன நேரம்வேலாயுதனே. 60

கையாறநின்னடியைக் கட்டிமனப்பூசைசெய்து
மெய்யாறயென்னினைவு மெய்தான்வேலாயுதனே. 61

கண்ணுறநின்னுடைய கமலமலர்கண்டழுகை
பண்ணுறப்பாடவெகு பட்சம்வேலாயுதனே. 62

வானோர்துயரகற்றி வாழ்வளித்ததெய்வமென்னைத்
தானேவலையவைத்தாய் தகுமோவேலாயுதனே. 63

இந்திரனைக்காத்தரசு யேற்றிவைத்தவுந்தனுக்கு
மைந்தனிடர்நீர்ப்பதொரு மலையோவேலாயுதனே. 64

நவின்றதிருமந்திரத்தை நாவிலெழுதாமல்
செவியிலுரைத்ததென்ன செயலோவேலாயுதனே. 65

ஓதத்துணிந்தனது வுள்ளமகிழ்ந்தவந்தும்
காதிலுரைத்ததென்ன கபடோவேலாயுதனே. 66

தெய்வமேநின்னருளை தேடுமிந்நாளில்தயை
செய்யாதிருக்கிலென்ன செய்வேன்வேலாயுதனே. 67

அந்தநாள்வந்துன்னாந்த வருமையுபதேசமதை
இந்தநாள்சொல்லமன மேனில்லைவேலாயுதனே. 68

அறிவென்பதில்லாத வந்நாளிற்சொன்னதினால்
குருவென்றறியாமல் குறைந்தேன்வேலாயுதனே. 69

சிறுவயதில்நீதயவு செய்தருளியெந்தனுக்கு
இருவினையிற்சொன்னதுவு மிழந்தேன்வேலாயுதனே. 70

திரண்டவுடமைகளைத் தேடுதல்போலுன்னடியை
வரண்டுகிறேனினியொருக்கால் வருள்செய்வேலாயுதனே. 71

அறியாச்சிறுவயதி லாசையாய்ச்சொன்னதுமா
பிரியமென்றனுமது பேதம்வேலாயுதனே. 72

அக்காலுரைத்ததென்மே லன்புகுறியாகிலதை
இக்காலுரைக்கில்வெகு வியல்பாம்வேலாயுதனே. 73

நாலுமுரைத்தனென்று நாளில்லாநாளதனிற்
றுறேனுவுரைப்பதது தகுமோவேலாயுதனே. 74

போனதெல்லாம்போகுதுன்னை போற்றமனம்பக்குவந்தான்
ஆனநாளாகையினு லருள்செய்வேலாயுதனே. 75

தொட்டகுறையில்லையென்ற துட்டர்களின்சொல்வழிநான்
பட்டதையும்விட்டதென்ன பாபம்வேலாயுதனே. 76

நம்புமடியார்முகமே நாடாமல்நீயிருந்தால்
அம்புவியிலுன்னடியா ரார்தான்வேலாயுதனே. 77

கலியுகமீதென்றுமுகம் காட்டாமல்நீயிருந்தால்
நலியாரோவுன்னடியார் நன்றோவேலாயுதனே. 78

ஆடிச்சலித்து வசையாதபம்பரம்போல்
பாடிச்சலிப்பதென்று பகராய்வேலாயுதனே. 79

உன்னைநினைத்து வுயர்பதவிபெற்றவர்கள்
தன்னைநினைக்குமதி தாராய்வேலாயுதனே. 80

கொடுமையறியேன் குறும்பறியேனென்னையுமோர்
அடிமைகொளல்வேண்டு மையாவேலாயுதனே. 81

அடிமைத்திறந்தா னடைந்தேனில்லையெனினுங்
கடமையுனக்கலவோ கண்டாய்வேலாயுதனே. 82

புத்திமயக்கம் பெருமயக்கந்தீர்த்தெனக்கு
பத்திமயக்கம் பகராய்வேலாயுதனே. 83

நிமையளவுநேரம் நில்லாமனக்குரங்கை
அமைத்தலுனதுகட னன்றோவேலாயுதனே. 84

பாசவலையிற் படுமனத்தின்பின்றுடர்ந்து
நாசமடைதல் நன்றோவேலாயுதனே.. 85

உரைக்கவுரைக்கவென துள்ளமுடம்பினுமுன்
திறத்தினினிப்பு திகட்டேன்வேலாயுதனே. 86

பொய்யேதிரண்டுவந்த புழுமரத்தைநின்னடிமைச்
செய்யாதிருக்கிலிது சேதம்வேலாயுதனே. 87

பூர்த்தமலர்மணமே பொன்னொளியேவிண்ணவரைக்
கார்த்ததுரையேயென் கண்ணேவேலாயுதனே. 88

கண்ணேகருத்தேயென் கருத்திலடங்காச்சுகமே
விண்ணோர்கள்போற்றும் விளக்கேவேலாயுதனே. 89

விளக்கேயருள்திரண்ட வெள்ளமேயாராலும்
அளக்கறியாலோகமெல்லா மமர்ந்தவேலாயுதனே. 90

காணுத்திரவியமே கற்கண்டேசர்க்கரையே
சேணுடர்போற்றுமெழில் செல்வவேலாயுதனே. 91

தித்திக்குந்தேனே திகட்டாததெள்ளமுதே
முத்திப்பெருந்துணையே முருகாவேலாயுதனே. 92

உற்றதுணையில்லே லுறவில்லேலுண்மையிது
பெற்றதுணையே பெரியோய்வேலாயுதனே. 93

பெரியதுணையென்றே பிடித்தேனுன்கஞ்சமலர்
துரியநிலையெனக்குத் தூண்டாய்வேலாயுதனே. 94

தெய்வமுதலே திருவருளின்வித்தேநான்
உய்யும்வகைசற்றே யுரைசெய்வேலாயுதனே. 95

தாய்முகத்தைக்காணா தருங்குழவிபோலலையும்
சேய்முகத்தைப்பாராய் சிவமேவேலாயுதனே. 96

சேய்பிழைகளெத்தனைதான் செய்தாலுமீன்றெடுத்த
தாய்பொருப்பளன்றோ தயைசெய்வேலாயுதனே. 97

என்னபிழைநா னிழைத்தாலுமுன்னையன்றி
பின்னைகதியுண்டோ பிரபுவேலாயுதனே. 98

பாயுமோநின்கருணை பாய்ந்தெனதுஆவலெல்லாம்
ஓயுமோசற்கதியு முண்டோவேலாயுதனே. 99

மன்னுயிரைத்தன்னுயிர்போல் மருவினினைக்குமந்த
நன்னெறியையென்னறிவில் நாட்டாய்வேலாயுதனே. 100

காதற்பெருகிக் கரையுமடியேற்குனது
பாதநிழலும் படுமோவேலாயுதனே. 101

படுமோநின்பாதநிழல் பட்டெனதுவூழ்வினையுங்
கெடுமோநினைவிடவுங் கதியார்வேலாயுதனே. 102

அல்லாதேயாகிலென தாசையெல்லாமுன்னடிமேற்
செல்லாதேசென்றதுநின் செயல்தான்வேலாயுதனே. 103

கல்வியறியேன் கருத்தறியேனுன்பெருமை
சொல்லவறிவேனோ ஜோதிவெலாயுதனே. 104

சொன்னதையேசொல்லும் சோலைக்கிளியதுபோல்
முன்னமடியார் முறைதான்வேலாயுதனே. 105

கொண்டிருக்குமெண்ணமெல்லாங் கூடவருள்செய்வதன்றி
கண்டிக்கவேண்டாமென் கர்த்தாவேலாயுதனே. 106

எண்ணியவென்னெண்ணமெல்லா மீடேறச்செய்யில்வெகு
புண்ணியமுண்டென்னைப் பெற்றவேலாயுதனே. 107

வஞ்சப்பொறிவழியே வாதாடுமென்மனதை
கொஞ்சந்திருப்புமையா குருவேவேலாயுதனே. 108

நில்லேனொருகடிகை நினையேனுன்றிருவருளை
பொல்லாமதியெனக்கேன் போட்டாய்வேலாயுதனே. 109

பெற்றதுணையே பெருந்துணையேபிறவியெலாம்
உற்றதுணையேயென் னுயிர்த்துணைவேலாயுதனே. 110

நீலக்கலாபமிசை நின்னழகைப்பார்க்கவெகு
காலநினைப்பெனக்கு கண்டாய்வேலாயுதனே. 111

கணப்போதுமோர்நிலையை கருதிநிலைநில்லாவென்
குணத்தைத்திருப்பிக் கொடுப்பாய்வேலாயுதனே. 112

காலையிலும்வேல்மயிலுங் கடும்பகலும்வேல்மயிலும்
மாலையிலும்வேல்மயிலும் மறவேன்வேலாயுதனே. 113

நின்றாலும்வேல்மயிலும் நிகழ்ந்தாலும்வேல்மயிலும்
உண்டாலும்வேல்மயிலு முண்மைவேலாயுதனே. 114

அடுத்தாலும்வேல்மயிலு மழைத்தாலும்வேல்மயிலும்
படுத்தாலும்வேல்மயிலும் பகர்வேன்வேலாயுதனே. 115

இருந்தாலும்வேல்மயிலு மெழுந்தாலும்வேல்மயிலும்
துறந்தாலும்வேல்மயிலுந் துறவேன்வேலாயுதனே. 116

குழைத்தாலும்வேல்மயிலுங் குறித்தாலும்வேல்மயிலும்
இழைத்தாலும்வேல்மயிலு மென்பேன்வேலாயுதனே. 117

சென்றாலும்வேல்மயிலுஞ் செய்தொழிலும்வேல்மயிலும்
நின்றாலும்வேல்மயிலும் நினைப்பேன்வேலாயுதனே. 118

நன்மலரைச்சாற்றிதொழும் நயமறியாப்பாவியென்றன்
சொன்மலரைச்சாற்றியருள் சுவாமிவேலாயுதனே. 119

பூத்தமலரொடுத்துப் போற்றவறியாவடியேன்
சாற்றுந்தமிழ்மலர்க்குச் சரணருள்வேலாயுதனே. 120

காலமலர்சாற்றக் கணக்கறியாவேழைதமிழ்க்
கோலமலரேற்பாய் குமரவேலாயுதனே. 121

சீதமலர்கொண்டுதொழுஞ் சிறப்பறியாவேழை நிதம்
ஓதுமலர்சாற்றியரு ளுண்மைவேலாயுதனே. 122

அஞ்சுமலர்தொடுக்கு மடியாருடன்கலக்கக்
கஞ்சமலர்தருவாய்க் கருணைவேலாயுதனே. 123

நருமலரால்நின்மலனை நாடித்தொழுமினிய
பொருமைதானென்றெனக்குப் பிறக்கும்வேலாயுதனே. 124

நித்தமலரொடுத்து நின்மலனைப்போற்றிசெயும்
புத்திதானென்றெனக்குப் பிறக்கும்வேலாயுதனே. 125

வேதமலர்தொடுத்து வீறுபெற்றநின்னடியார்
பாதமலரொன்றெனக்குப் பலிக்கும்வேலாயுதனே. 126

மனத்தைப்பலிகொடுத்து மனக்கவலையற்றவர்கள்
இனத்தைக்கலப்பதுநா னென்றுவேலாயுதனே. 127

புல்லறிவாலின்னமென்னப் புகல்வேநானேழையந்தோ
சொல்லுமறிவிலையே சுந்தரவேலாயுதனே. 128

மனப்பழக்கமன்றியுந்தன் மலரடிக்குத்தொண்டுசெய்வா
ரினப்பழக்கமெள்ளளவு மில்லைவேலாயுதனே. 129

பாதநிழல்வேண்டியுன்னைப் பாடுமுனிசாமியென்னைச்
சோதனைச்செய்யாதேசிவ ஜோதிவேலாயுதனே. 130

தெய்வமேதுணை.

வேலாயுதக்கண்ணிகள்,

முற்றுப்பெற்றது.